1970 மார்ச் 2]

நாளிட்ட கடிதத்தில் கேட்டிருந்தார். தமிழ் நாடு அரசாங்க தட்டெழுத்துத் தேர்வுகளுக்கு நிகராக அந்நிய நாட்டுத் தேர்வுகளைக் குறிப்பிட்டுள்ள அரசாங்க ஆணையின் அல்லது விதியின் நகலை அனுப்புமாறு அவர் கேட்டிருந்தார். இந்தியாவிற்கு வெளியேயுள்ள தேர்வுக் கழகங்கள் சார்பில் இந்தியாவில் உள்ள முகவர் நிறுவனங்களால் நடத்தப்படும் வணிக இயல் பாடங்கள் எதிலாகிலும் தேர்ச்சி பெறுவது அரசாங்க ஒப்புதலைப் பெறுதென்று அவருக்கு அறிவிக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்ற சகோதர சகோதரிகள் நம்முடைய அனுதாபத்திற்குரியவர்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் கவனிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். இதற்கு முன்னாலே இதுபற்றி நடவடிக்கைகள் எடுக்காவிட்டாலும் இனிமேலாவது அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்ற திரு. பி. சங்கரநாராயணன் என்பவர் எந்தக் கோரிக்கையையும் அனுப்பவில்லை. தகவல்தான் கேட்டிருந்தார். அதாவது இங்கிலாந்தில் இருப்பதைப் போன்று இங்கேயும் இருக்கிறதா அதற்கு ஈடாக இருக்கிறதா என்ற தகவலைத்தான் கேட்டிருந்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று கோரிக்கைகள் வைக்கப்பட்டால் அவற்றை அனுதாபத்துடன் கவனித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. வ. ஜார்ஜ் : உடல் ஊனமுற்றவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். படித்த பிறகும் வேலையில்லாது திண்டாடி வாட்டமுறும் நிலைமையைப் பார்க்கிறோம். அவர்களுக்கெல்லாம் சலுகை அளித்து வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா? மு.ப. 2–30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் தனியார் நிறுவனங்களும், அரசாங்க நிறுவனங்களும் ஓரளவு கவனம் செலுத்தித்தான் வருகின்றன. தனியார் துறையில் உள்ள தொழிற்சாலைகளில் உடல் ஊனமுற்றவர்கள் செய்யக்கூடிய பணிகளுக்கேற்றவாறு சில பல இடங்களில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அரசாங்க அமைப்புகளிலும் அவர்களுக்கு ஏற்ற வேலைகள் கொடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுத்தான் வருகின்றன.

தனியார் நிறுவனங்களின் கீழ் உயர்நிலைப்பள்ளிகள்

*** 155 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் ஸ்தாபனங்களின் மூலமாக உயர்நிலைப்பள்ளிகள் திறக்க வேண்டி மனுக்கள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1969-70ம் ஆண்டில் தனிப்பட்டோரிடமிருந்து 25 மனுக்கள் வந்தன. அதிலே 13 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : வந்த மனுக்களில் அரிசனங்களின் சார்பில் தனியார் பள்ளி நடத்துவதற்கான மனுக்கள் வந்தனவா? ஜாதி இந்துக்கள் பள்ளிகளைத் தொடங்க வேண்டுமென்றால் இருக்கின்ற நிபந்தனைகளில் இருந்து அரிசனங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அனுமதி கொடுக்கப்பட்ட பள்ளிகளின் விவரங்கள்தான் இருக்கின்றன. அரிசனங்களுக்கு என்று தனியாக வந்ததா என்ற விவரக் குறிப்பு இல்லை. பொதுவாக எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் எந்த நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கப்படுகின்றதோ அதே அடிப்படையில்தான் அரிசனங்கள் சார்பாக வந்தாலும் வழங்கப்படும். இப்படிப்பட்ட பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஐந்து ஏக்கர் நிலம் வேண்டும், கட்டிடம் வேண்டும் என்பது போன்ற விதிமுறைகளில் மாற்றம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education the terms and conditions required to start private high schools and the financial aid that the Government are going to give for such high schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் துறையில் உயர்நிலைப் பள்ளிகளை அமைக்க வேண்டுமென்றால், ஆண்கள் பள்ளியாக இருந்தால் ஐந்து ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், பெண்கள் பள்ளியாக இருந்தால் மூன்று ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்; கட்டடம், சுகாதார வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; எழுபதாயிரம் ரூபாய் முன்பணமாகச் செலுத்தவேண்டும்; அதிலே முதல் தவணையாக 35,000 ரூபாயும், பாக்கி 35,000 ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு ஏழாயிரம் வீதம் ஐந்து ஆண்டு காலத்திலும் கட்ட வேண்டுமென்று விதி இருக்கிறது.

திரு. வ. ஜார்ஜ் : தனியார் பாடசாலைகளைத் திறப்பதற்கான விதிமுறைகளின்படி என்டௌமென்ட் கட்டும் நிலைமை இருக்கிறது. கிறித்துவ ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்குப் பணமாக என்டௌமென்ட் கட்டுவதில் இருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது காஷ் என்டௌமென்ட் கட்ட வேண்டுமென்றுதான் விதி இருக்கிறது. கிறித்துவ சமூகத்தினரால் தனியாக நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு பணமாகக் கட்டுகின்ற நிலைமையை மாற்றி வேறுவகையில் செக்யூரிடி கட்டும் முறையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அந்த விண்ணப்பங்கள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றன. விரைவில் தக்க முடிவு மேற்கொள்ளப்படும்.

1970 மார்ச் 2]

திரு. என். கிட்டப்பா : *தனியாரால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் லாப நோக்கம் கருதி வணிக முறையில் நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த நிலைமையை மாற்ற அரசு தனியார் பள்ளிகளை எடுத்து நடத்த முன்வருமா?*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *தனியார் நடத்தும் பள்ளிகளில் பெரும்பாலானவை இலாப நோக்கோடு இருக்கின்றன என்று சொல்லுவதற்கில்லை. ஒரு சில அப்படி இருக்கலாம். அதைக் கட்டுப்படுத்த விதிமுறைகள் இருக்கின்றன. அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டு எந்த எந்த வகையில் சீர்திருத்தலாம் என்பதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. குழு அறிக்கை சமர்ப்பித்த பிறகு சிலபல குறைபாடுகள் இருந்தாலும் நீக்குவதற்கான வழிவகைகளைத் தேடலாம். பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகள் அந்த நோக்கத்தோடு இல்லை; நல்ல முறையில் இருக்கின்றன.*

திரு. எம். பூபதி : *தனியாரால் நடத்தப்படுகின்ற கல்வி ஸ்தாபனங்களில் அநியாயமாக முன்கூட்டியே ராஜினாமா கடிதம் வாங்கி வைத்துக் கொள்ளுவது, சம்பளத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக் கொள்ளுவது போன்ற முறைகள் இருக்கின்றன. அந்த நிலைமைகளைப் போக்கும் வகையில் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற முறைகேடான செயல்கள் நிகழும்போது பாதிக்கப்பட்டவர்கள் முறையீடு செய்து கொள்ளுகிறார்கள். கல்வி அதிகாரிகள் அந்தந்த மாவட்டங்களில் தக்கபடி ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். இப்போது இருக்கும் சட்டதிட்ட அடிப்படையில் பள்ளிகளுக்குத் தரும் மானியத்தைத்தான் நிறுத்த முடியுமே தவிர, நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள வழி இல்லை. இப்போது அமைக்கப்பட்ட குழுவினர் ஆங்காங்குள்ள நிலைமைகளைப்பற்றியெல்லாம் கருத்துக்களைத் திரட்டி வருகிறார்கள். குழுவின் அறிக்கைக்குப் பிறகு எந்தெந்த வகையில் தீவிரமான முறைகளை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்யலாம். தற்போது மாவட்ட கல்வி அதிகாரிகள் இத்தகைய முறைகேடான செயல்கள் நடக்கும்போது தக்க நடவடிக்கை எடுத்து நீதி வழங்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி கேள்வி எண் 156, 157 ஒத்திவைக்கப்படுகின்றன.*

Vegetable Marketing Society

*158 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government propose to start a vegetable marketing society ; and

(*b*) whether its function is to purchase vegetables from growers within a radius of 80 K.M. from the City?